# திராவிட மாடல் அரசு 24

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

## கலைஞர் ‘ஆயுள்’ நூறு!

‘நூற்றாண்டு’ என்பது வெறும் எண் அல்ல. அது ஒரு சகாப்தம். நூறு வயது வரை வாழ்வது சாதனை அல்ல. நூற்றாண்டுகள் கடந்தும் ஒரு மனிதர் மக்களின் மனங்களில் நினைக்கப்படுவதுதான் உண்மையான சாதனை.

நூற்றாண்டு கண்ட மகத்தான மனிதர்களுக்கு, அவர்களின் நினைவாக ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்புவது உலகம் முழுவதும் உள்ள வழக்கம்தான். சில நினைவுச் சின்னங்கள் காலப்போக்கில் சுற்றுலா தலமாகும். சில கண்டுகொள்ளப்படாமல் போகும். அப்படி அல்லாமல், மக்களுக்குப் பயனுள்ள வகையில் அந்த நினைவுச் சின்னங்கள் இருக்குமேயானால், அது தலைமுறை தலைமுறையாக, அந்த மனிதரின் பெயரை எதிரொலித்துக் கொண்டே இருக்கும். அது சாகாவரம் பெற்ற கட்டமைப்பாகத் திகழும்.

அப்படி ஒரு நினைவுச் சின்னம்தான், சென்னை கிண்டியில் தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, அவரது நூற்றாண்டு பிறந்த தருணத்தில், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், எழுப்பியிருக்கும் ‘கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை’.





### அனைவருக்குமான ஆரோக்கியம்... ஒரே இடத்தில்!

‘இந்தியாவின் ஆயுள் ரேகை’ என்று போற்றப்படும் அளவுக்கு தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு இருக்கிறது. இந்நிலையில், சென்னையில் மேலும் ஏன் ஒரு மருத்துவமனை, அதுவும் ‘பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை’ என்று பலருக்கும் கேள்வி எழலாம். அதற்குக் காரணம் இன்று பெருகி வரும் நோய்கள்தான். கோவிட் போன்ற தொற்றுநோய்களைக் கூட ஓரளவு சமாளித்துவிட முடிகிறது. ஆனால், நுகர்வுக் கலாச்சாரம், அதனால் மாறி வரும் உணவுப் பழக்கங்கள், உடற்பயிற்சி அற்ற வாழ்க்கைச் சூழல் போன்றவற்றால் நீரிழிவு, இதய நோய் போன்ற தொற்றா நோய்கள் ஏற்படுத்தும் தாக்கம்தான் இன்று அதிகமாக இருக்கின்றது.

இந்த நோய்களால் ஏற்படும் உடல் நலக் குறைபாட்டால், நம் மாநிலத்தின் நோய்ச்சுமை கூடுகிறது என்கின்றன ஆய்வுகள். தமிழ்நாட்டில் இத்தகைய தொற்றா நோய்களால் ஏற்படும் மரணங்கள் மட்டும் சுமார் 69.2 சதவிகிதமாக இருக்கிறது.

இந்தப் பின்னணியில், இத்தகைய நோய்களுக்குப் பன்முகச் சிகிச்சைகள் அளிப்பது, ஆய்வுகள் மேற்கொள்வது, ‘டெங்கு’, ‘சிக்குன்குனியா’ போன்று திரும்பத் திரும்பத் தோன்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவது, பல்வேறு வகையான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்க பல சிறப்புத் துறை மருத்துவர்களும் உபகரணங்களும் இருப்பது என மருத்துவம் சார்ந்த அனைத்து விஷயங்களும் ஒரே குடையின் கீழ் இருப்பது மக்களின் நேரத்தை மிச்சப்படுத்தி, அவர்களை அலையவிடாமல் ஒரே இடத்தில் அரவணைக்கும் ஆதுர சாலைகளாக விளங்குவதால்தான் பன்னோக்கு மருத்துவமனைகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அப்படி ஓர் ஆதுர சாலைதான் ‘கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை’.

### நூறாண்டு போற்றும் நூற்றாண்டுச் சாதனை!

2021- ஜூன் 3-ஆம் தேதி, கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ’சென்னையில் உள்ள ‘கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாக’த்தில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும்’ என்று நம் முதலமைச்சர் அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டுவதற்காக சென்னை கிண்டி கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் சுமார் 4.89 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, மருத்துவமனைக்கு கட்டடம் கட்டுவதற்காக முதற்கட்டமாக 230 கோடி ரூபாய் நிதியும், பின்னர் கூடுதலாக 10 கோடியே 54 லட்ச ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொடர்ந்து, 2022 மார்ச் 21 ஆம் தேதி, மருத்துவமனைக்கான அடிக்கல்லை முதலமைச்சர் நாட்டினார்.

துரிதமாக நடைபெற்ற கட்டுமானப் பணிகளால், 15 மாதங்களில் இந்த மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டுக்காக 2023 ஜூன் 15-ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஆறு தளங்கள் கொண்ட இந்த உயர் சிறப்பு மருத்துவமனையில், ரூ.146.52 கோடி செலவில், பல்வேறு நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவ உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், மருத்துவமனையின் செயல்பாட்டுக்காக மருத்துவர்கள், செவிலியர்கள், பிற துணை மருத்துவ ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள் உட்பட 1,000 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.



### வராத ‘எய்ம்ஸ்’... அடைந்த ‘இலக்கு!’

“2015-ஆம் ஆண்டு அறிவித்துவிட்டு, 2023-ஆம் ஆண்டு கூட, 2-வது செங்கலை எடுத்து வைக்காத அலட்சியத்தில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை இருக்கும் நிலையில், அடிக்கல் நாட்டிய 15 மாதத்தில் கட்டிமுடித்துள்ளோம். இதுதான் மிக முக்கியமான சாதனை. மக்களுக்கு உண்மையான சேவை நோக்கத்தோடு திட்டங்களைத் தீட்டுபவர்களுக்கும் மக்களை ஏமாற்றுவதற்காகத் திட்டங்களை அறிவிப்பவர்களுக்குமான வேறுபாட்டை, தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மைகள் செய்ய நினைக்கும்போதெல்லாம், அதற்கு ஒரு இடைஞ்சலை ஏற்படுத்தி, நம்மை திசை திருப்பி நன்மைகளைத் தடுக்கப் பார்ப்பார்கள். ஆனால், நாம் திசை திரும்ப மாட்டோம். மக்கள் நலன் ஒன்றே எனது இலக்கு என்ற நேர்வழியில் பயணிப்போம்" என்று இந்த மருத்துவமனைத் திறப்பு விழாவில் குறிப்பிட்டார் நம் முதலமைச்சர். ‘திராவிட மாடல் அரசு, இலக்குகளை எட்டுகிற அரசு’ என்பதன் அடையாளமாய் கம்பீரமாய் நிற்கிறது, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை.

...சாதனை தொடரும்


**கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் உள்ள வசதிகள்**

❖ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டப் பிரிவு ❖ அவசர மருத்துவப் பிரிவு ❖ மயக்கவியல் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு ❖ மைய ஆய்வகம் ❖ குருதி வங்கி ❖ கதிரியக்கவியல் பிரிவு ❖ இயன்முறை மருத்துவம் மற்றும் மறுவாழ்வுப் பிரிவு ❖ நோயாளிகளுக்கான தனி மற்றும் சிறப்பு அறைகள் ❖ நவீன சலவையகம் ❖ நூலகம் ❖ சிற்றுண்டியகம் ❖ தகவல் மையம் ❖ விசாலமான காத்திருப்புக் கூடம் ❖ 15 அறுவை சிகிச்சை அரங்கங்கள்

**கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் இயங்கும் துறைகள்**

- ❖ இருதயவியல் மற்றும் அறுவை சிகிச்சைத் துறை
- ❖ நரம்பியல் மற்றும் அறுவை சிகிச்சைத் துறை
- ❖ புற்றுநோய் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைத் துறை
- ❖ குடல் இரைப்பை மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைத் துறை
- ❖ சிறுநீரக மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைத் துறை
- ❖ இரத்த நாள அறுவை சிகிச்சைத் துறை
- ❖ நரம்புசார் கதிரியக்கத் துறை

## சமத்துவக் கூட்டாட்சி!




இந்திய ஒன்றியத்துக்கும் மாநிலங்களுக்கும் இன்று எழுந்திருக்கும் மிகப் பெரும் அச்சுறுத்தலாக இந்துத்துவச் சிந்தனை திகழ்கிறது. இந்தச் சூழலில் தேசியம் என்ற கருத்தாக்கத்தின் பொய்களையும் மெய்களையும் அறிந்துவைத்துக் கொள்வது அவசியமாகும். அதற்கு பார்த்தா சாட்டர்ஜி எழுதி கடந்தாண்டு வெளியான The Truths And Lies Of Nationalism: As Narrated by Charvak எனும் முக்கியமான நூல் நமக்கு உதவும். பார்த்தா சாட்டர்ஜி இந்தியாவின் முக்கிய அரசியல் ஆய்வாளர். காலனியம், தேசியம், அதிகாரம், விடுதலைப் போராட்டம், ஜனநாயகம் உள்ளிட்ட பல துறைகள் சார்ந்து, தொடர்ச்சியாக ஆய்வுகள் மேற்கொண்டு வருபவர்.

ஆங்கிலத்தில் இருக்கும் தேசியம் தொடர்பான சிந்தனைகளை அவரவர் தாய்மொழிக்குக் கொண்டு செல்வதை முக்கியமான செயல்பாடாகச் சொல்கிறார் சாட்டர்ஜி. அனைவரது தனித்துவங்களையும் மதித்து, அவர்களைச் சமத்துவமாக நடத்தும் ஒரு கூட்டாட்சி ஜனநாயகத்தையே நாம் நம் கனவாகக் கொண்டு செயலாற்ற வேண்டும் என்று இந்நூல் வலியுறுத்துகிறது. மக்கள் மீதான பற்றே உண்மையான தேசபக்தி என்கிறது இந்நூல்.

## :ப்ளாஷ்பேக்



### தலைவர் தந்த மோதிரம்!

மதுரை மாவட்டம், மேலமாசி வீதி பகுதியில், 1994-ஆம் ஆண்டு கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வைகோ அவர்கள் கழகத்தில் இருந்து வெளியேறியிருந்த நேரத்தில் கலைஞரின் வருகை எங்களுக்கு உற்சாகத்தை அளித்ததுடன் அவரின் உரை புது ரத்தம் பாய்ச்சியது. தொண்டர்கள் சார்பாக, கழக வளர்ச்சி நிதி அளித்தோம். அதிகம் நிதி அளித்தவர்களுக்கு ‘உதயசூரியன்’ சின்னம் பொறித்த மோதிரத்தைப் பரிசாக வழங்கினார். அப்போது எடுத்த படம் இது. அன்றைய கழகப் பொருளாளர் ஆற்காட்டார் அவர்களும் உடனிருந்தார்.



தமிழ்ச்செல்வன்

**-பா.தமிழ்ச்செல்வன், வழக்கறிஞர், வட்ட முன்னாள் செயலாளர், மதுரை மாவட்டம்**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஆளுநர் வரம்பு!

**1994-ஆம் ஆண்டு, ஜெயலலிதா ஆட்சிக்கும் ஆளுநர் சென்னாரெட்டிக்கும் உச்சக்கட்ட மோதல் நடைபெற்றது. டெல்லி சென்ற ஆளுநர், செய்தியாளர்களிடம் வெளிப்படையாக ஆட்சி குறித்துக் குற்றம்சாட்டினார். எதிர்க்கட்சியாக இருந்த போதும் ஆளுநரின் செயலுக்கு கலைஞர் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தினார். “மாநில அரசின் நடவடிக்கைகள் குறித்து, அந்த அரசுக்கு சாதகமாகவோ, பாதகமாகவோ ஒன்றிய அரசிடம் ஆளுநர் அறிக்கை கொடுக்கலாம். ஜெயலலிதா ஆட்சியில் குற்றம் குறைகள், ஊழல் முறைகேடுகள், சட்டம்-ஒழுங்கு சீர்கேடுகள் இல்லை என எவராலும் சொல்ல முடியவில்லை என்றாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நடைபெறும் ஆட்சியை ஆளுநர் வெளிப்படையாக விமர்சிப்பது சரியில்லை’’ என எதிர்ப்பு தெரிவித்தார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 167




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.